# பாதுகாப்பான இணைய விளையாட்டு

**உங்கள் குழந்தை கற்றுக்கொள்ள உதவவும் நண்பர்களைப் பெறவும் இணைய விளையாட்டுக்கள் உதவும் அதே நேரத்தில் அவை அதிகளவு கேளிக்கைகளையும் கொண்டுள்ளன.**

ஆனால் இதில் வன்முறை உள்ளடக்கத்தைப் பார்க்க நேர்வது, அடாவடிக்கு ஆளாகுதல் அல்லது அறியாதவர்களால் தொடர்புகொள்ளப்படுவது போன்ற அபாயங்கள் உள்ளன.

நல்லவேளையாக உங்கள் குழந்தை இணையத்தில் விளையாடும்போது அவர்கள் பத்திரமாக இருக்க நீங்கள் உதவக்கூடிய விசயங்களும் உள்ளன.

## உங்கள் குழந்தைக்கு உதவுங்கள்

உங்கள் குழந்தையின் சாதனத்திலும் விளையாட்டிலும் உள்ள அமைப்புகளைப் பயன்படுத்தி பொருத்தமில்லாத உள்ளடக்கத்தை முடக்கி அவர்கள் விளையாட்டின்போது தேவையில்லாதவற்றை வாங்குவதை நிறுத்துங்கள்.

இட்டுக்கட்டப்பட்ட ஒரு திரைப்பெயரை உருவாக்குவதுடன் தங்கள் உண்மைப் பெயரை தனிப்பட்டதாக வைத்திருப்பதுடன் ஊகிக்கக் கடினமான ஒரு கடவுச்சொல்லை அவர்கள் பயன்படுத்த வேண்டும்.

## நேர்மறையான விளையாட்டு அனுபவங்கள்

உங்கள் குழந்தை விரும்பும் விளையாட்டுகளை அவர்களுடன் சேர்ந்து விளையாடி அவை குறித்துத் தெரிந்துகொள்ளுங்கள். இது சாத்தியமான அபாயங்களை நீங்கள் அடையாளம் காணவும் உதவும். மேலும் நீங்கள் செய்யக்கூடியவை:

- உங்கள் குழந்தைகள் யாருடன் விளையாடுகின்றனர், என்ன விளையாட்டுகளை ஆடுகின்றனர் என்று அவர்களுடன் பேசுங்கள்.
- விளையாட்டுகளில் அதிகளவு வெகுமதிகள் இருக்கலாம். அவர்களுக்கு நேர்மறையான அனுபவங்களைத் தரக்கூடிய பிற வழிகளை முயற்சியுங்கள்.
- உங்கள் குழந்தையின் விளையாட்டு குறித்து உங்களுக்குக் கவலை இருந்தால் அவர்களுடன் பேசுங்கள். சிறார் உதவி எண் அல்லது பெற்றோர் உதவி எண்ணைத் தொடர்புகொண்டு ஓர் ஆலோசகரிடமிருந்தும் நீங்கள் உதவி பெறலாம்.

## பிரச்சினைகளைக் கையாளுதல்

ஒருவர் பொருத்தமில்லாத விசயங்களை அவர்களிடம் சொல்வது அல்லது முகவரி போன்ற தனிப்பட்ட தகவல்களை அவர்களிடம் கேட்பது போன்றவற்றால் உங்கள் குழந்தைக்கு ஏதேனும் கவலையளித்தால் அல்லது அசௌகரியமாக உணரச் செய்தால் அது குறித்து அவர்கள் உங்களிடம் கூறலாம் என்று உங்கள் குழந்தைக்குத் தெரியப்படுத்துங்கள்.

அடாவடி, இனவாதம் அல்லது துன்புறுத்தல் போன்றவை ஒருபோதும் ஏற்கத்தக்கதல்ல என்பதையும் அவர்கள் அதைப் புகார் தெரிவிக்க வேண்டுமென்றும் உங்கள் குழந்தைக்குத் தெரியப்படுத்துங்கள். eSafety வழிகாட்டியைப் பயன்படுத்தி இணையத்தை தவறாகப் பயன்படுத்துவதைப் புகாரளிப்பது எப்படி என்று அறிந்துகொள்ளுங்கள். விளையாட்டு செயற்தளம் உதவவில்லை எனில், சரியான உதவியைப் பெற உதவுவதற்கு eSafety-யைத் தொடர்புகொள்ளுங்கள்.



உங்கள் குடும்பத்தை இணையத்தில் பாதுகாப்பாக வைத்திருப்பது குறித்த கூடுதல் தகவல்களுக்கு, எங்கள் இணையதளத்தில் eSafety Parents (இணையப் பாதுகாப்பு பெற்றோர்) என்று தேடுங்கள்.